Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 45

சனிக்கிழமை
10 ஜனவரி 2026

மார்கழி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## டக்ளஸ் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஜன. 10
முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பிணையில் விடுவிக்குமாறு கம்பஹா நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.
2001ஆம் ஆண்டு டக்ளஸின் தனிப்பட்ட பாதுகாப் »11

*கல்லுண்டாயில் உள்ள*

## கழிவுகள் சேகரிப்புக் காணியை யாழ். மாநகரசபைக்காகத் தருக

நேற்றைய அமர்வில் தீர்மானம் நிறைவேற்றம் ஜனாதிபதிக்கு அறிக்கை அனுப்பவும் முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 10
கல்லுண்டாயில் திண்மக் கழிவுகள் சேகரிக்கும் காணியை, யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உரித்துடையதாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதென, யாழ்ப்பாணம் மாநகர சபையின் நேற்றைய அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. »11

# யாழ்ப்பாணத்தின் ஊடாகவே காற்றழுத்தம் வெளியேறும்!

*பேராசிரியர் பிரதீபராஜா கணிப்பு*

**யாழ்ப்பாணம், ஜனவரி 10**

**வங்காள விரிகுடாவில் திருகோணமலைக்கு கிழக்காக நகர்ந்துவரும் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் முல்லைத்தீவை அடைந்து பின்னர் யாழ்ப்பாணத்தின் ஊடாகவே பாக்கு நீரிணைக்கு செல்லும் - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.** »11



## கல்லுண்டாய் காணியை கையளிக்கவே முடியாது!

வலி.தென்மேற்கு சபையின் முடிவு இதுவே என தவிசாளர் ஜெசீதன் உதயனுக்குத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10
கல்லுண்டாயில் திண்மக் கழிவுகள் சேகரிக்கும் காணியை எவருக்கும் உரிமை மாற்றவோ அல்லது நீண்டகால குத்தகைக்கோ வழங்க முடியாது என்று வலி.தென்மேற்கு சபையின் »11

*பிரதமருக்கு எதிரான*

## நம்பிக்கையில்லாப் பிரேரணை பொருத்தமான நடவடிக்கையே

பொதுஜன பெரமுன தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 10
பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவது மிகப் பொருத்தமான நடவடிக்கையே என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற »11

## கனடாவில் வாகன விபத்து; யாழ்ப்பாணப் பெண் சாவு

விரிவு பக்கம்:-05

## யாழ். மாநகர அதிகாரிகள் மீது சபையில் நேற்றுக் கடும் தாக்கு

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்ப்பாணம் மாநகரசபை வினைத்திறனற்று உள்ளது என்றும், இவ்வாறு இருப்பதற்கு மாநகர அதிகாரிகளே காரணம் எனவும் சபையின் நேற்றைய அமர்வில் மேயர் மதிவதனி விவேகானந்த »11

*அரச அதிகாரிகளை அவமதிக்கும்*

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கை!

பொதுநிர்வாக அமைச்சு தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 10
உள்ளூராட்சி சபைகளில் அரச அதிகாரிகளுக்கு எதிராகத் தொடர்ச்சியாக இடம்பெறும் அவமதிப்புகள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்துவதற்கு பொதுநிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. யாழ்ப்பாணம் மாநகரசபை உள்ளிட்ட பல்வேறு சபைகளில், அரச அதிகாரிகள் தொடர்ச்சியாக அவமதிக்கப்படுகின்றனர் என்றும், அவர்களுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன »11

## யாழ். மாநகரசபை அமர்வில் பங்கேற்க ஆணையாளர் மறுப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்ப்பாணம் மாநகரசபையின் எதிர்வரும் அமர்வுகளில் பங்கேற்க முடியாது என்று யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் கிருஷ்னேந்திரன் சபைக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.
யாழ்ப்பாணம் மாநகரசபையால் அரச அதிகாரிகள் தரக்குறைவாக நடத்தப்படுவதாக அண்மைக் காலமாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின் »11



முச்சந்தி முரளி

"எல்லாச் சபையளிலையும் உந்தப் பிக்கல் பிடுங்கலுக்கு மட்டும் குறைவில்லை கண்டியளோ"

## சிறுமியை வன்புணர்ந்த குற்றவாளிக்கு கடூழியம்

*வவுனியா மேல் நீதிமன்று அதிரடி*

வவுனியா, ஜன. 10
வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த, 16 வயதுக்கு உட்பட்ட சிறுமியை வன்புணர்ந்த குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
2020ஆம் ஆண்டு ஜூன் »11

## தமிழாராய்ச்சிப் படுகொலைகள்; 52ஆவது நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 10
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 52ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று இடம்பெறவுள்ளது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.01.2026 சனிக்கிழமை

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4311 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 19 35 55 58 |
| விசேட எழுத்து | M |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1378 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 03 29 46 49 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0337 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 2 5 9 0 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2417 |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 10 26 69 73 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6069 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 1 5 7 0 4 0 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2099 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 07 34 60 73 |
| விசேட எழுத்து | O |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0185 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 26 29 |

# நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுவது நல்லது

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.10**

**கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் கதைப்பதற்குரிய வாய்ப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் கிடைக்கும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்க தேரர்களை நேற்றுச் சந்தித்தார் பிரதமர். தரம்-6 ஆங்கில பாடப்புத்தகத்தில் ஏற்பட்டுள்ள சர்ச்சை மற்றும் கல்வி மறுசீரமைப்பு தொடர்பில் மகாநாயக்க தேரருக்கு பிரதமர் தெளிவுபடுத்தினார். இந்தச் சந்திப்புகளின் பின்னர், பிரதமருக்கு எதிராக எதிரணிகளால் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் அவரிடம் ஊடகங்கள் கேள்வி எழுப்பின. அதற்குப்பதிலளித்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்குரிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. இதன்மூலம் கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் மேலும் இரு நாள்களுக்கு கதைப்பதற்குரிய சூழ்நிலை உருவாகும். நம்பிக்கையில்லாப் பிரேரணை எப்படியும் தோற்கும். எனினும், கல்வி பற்றி கருத்தாடல் உருவாகியுள்ளது வரவேற்கக்கூடிய விடயம்-என்றார். (எ-44)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0777 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 0 9 7 3 0 6 |

**Super Ball DLB**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3043 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 03 33 44 45 |

**சனிதா DLB**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 05 14 38 78 |
| வெற்றி வாரம் | 5204 |

**SASIRI DLB**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0873 |
| வெற்றி இலக்கம் | 08 19 33 |

**லக்ன ராசி DLB**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ராசி | துலாம் |
| வெற்றி இலக்கம் | 16 23 35 53 |
| சீட்டிழுப்பு வாரம் | 4755 |

**KAPRUKA DLB**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 35 |
| வெற்றி இலக்கம் | 02 16 22 38 |
| வெற்றி வாரம் | 2219 |

**அத கோடிபதி DLB**

| | |
|---|---|
| திகதி | 09.01.2026 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 32 40 52 74 |
| வெற்றி வாரம் | 2869 |

# ஹரிணி அமரசூரியவின் பதவிகள் பறிக்கப்படாது

## அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டம்

கொழும்பு, ஜன.10

பிரதமர் பதவியில் இருந்து கலாநிதி ஹரிணி அமரசூரியவை நீக்குவதற்குரிய எந்தவொரு தேவைப்பாடும் எழவில்லை. அந்தப் பதவியில் அவர் தொடர்வார். அவரிடமிருந்து கல்வி அமைச்சும் பறிக்கப்படமாட்டாது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கல்வி மறுசீரமைப்பென்பது பரந்துபட்ட விடயமாகும். இதில் ஒரு அலகில்தான் வழு இடம்பெற்றுள்ளது. அதுதொடர்பாக விசாரணை நடத்தப்படுகின்றது. எனினும், குறுகிய நோக்கில் இந்த விடயம் சம்பந்தமாக அரசியல் நடத்தப்படுகின்றது. பிரதமர் பதவியில் மாற்றம் வராது. நாம் கூட்டுப் பொறுப்புடன் செயற்படுகின்றோம். கல்வி அமைச்சிலும் அவரே தொடர்வார். கல்வி மறுசீரமைப்பென்பது சவால்மிக்க பணியாகும். அதை நாம் செய்வோம். மக்கள் ஆணை அதற்கு உள்ளது-என்றார். (எ-44)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி; கடந்த ஆண்டு 4,734 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜன.10


கடந்த ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி தொடர்பாக 4 ஆயிரத்து 734 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடந்த ஆண்டு 791 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்ட சுமார் 121 பேர் கடந்த ஆண்டு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளைத் தடுக்கும் முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக, விசேட பயிற்சி பெற்ற அதிகாரிகளைக் கொண்ட விசேட பொலிஸ் பிரிவு ஒன்று கடந்த ஆண்டு பணியகத்திற்குள் நிறுவப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி மோசடிகளில் ஈடுபடுபவர்கள் அதிகரித்துள்ளதால், வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விடயங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 1989 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இலவச பாடசாலைச் சீருடை விநியோகம் ஜனவரியில்



கொழும்பு, ஜன.10

பாடசாலை மாணவர்களுக்கான 2026ஆம் ஆண்டின் இலவச பாடசாலைச் சீருடை விநியோகத்தை இந்த முறை ஜனவரி மாதத்தில் வழங்குவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான சீருடைக்காக சீன அரசாங்கத்தின் முழுமையான அன்பளிப்பாக 11.484 மில்லியன் மீற்றர் சீருடைத் துணிகள் வழங்கப்படுகின்றன. அவை தற்போது துறைமுகத்தை வந்தடைந்துள்ளன.

அவற்றை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்கும் நிகழ்வு, எதிர்வரும் 13ஆம் திகதி கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த ஆண்டு பாடசாலைச் சீருடைகளைப் பெற்றுக் கொள்ள சுமார் 44 இலட்சத்து 18 ஆயிரத்து 404 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர். ள

எதிர்வரும் 19ஆம் திகதி முதல் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு துணித்தொகைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# 187 பேருடன் பயணித்த விமானத்தில் கோளாறு

## அவசரமாகத் தரையிறக்கம்

கொழும்பு, ஜன.10

கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து குவைத் நோக்கிப் பயணித்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல்229 விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மீண்டும் கட்டுநாயக்க விமானநிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை இந்த விமானம் சுமார் 2 மணித்தியாலம் 21 நிமிடப் பறப்பின் பின்னர் மீண்டும் கட்டுநாயக்க விமானநிலையத்துக்குத் திருப்பிக்கொண்டுவரப்பட்டுள்ளது. விமானம் நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது, அதன் ஹைட்ரோலிக் அமைப்பில் கோளாறு ஏற்பட்டுள்ளதை விமானி அவதானித்துள்ளார். அதையடுத்து இரவு 9.05 மணியளவில் விமானத்தை விமானி தரையிறக்கியுள்ளார். இந்த விமானத்தில் 179 பயணிகள் மற்றும் 8 பணியாளர்கள் என மொத்தமாக 187 பேர் பயணித்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடற்படைத் தளத்துக்கு அருகில் இந்தியப் படகுகள் அட்டகாசம்!

யாழ்ப்பாணம்,ஜன.10

**யாழ்ப்பாணம்-வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டுக் கடற்பரப்பில் கடற்படைத் தளத்துக்கு அண்மையாக வந்து இந்திய இழுவை மடிப் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுவருகின்றன.**

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சீரற்ற கால நிலையால் கடல் கொந்தளிப்பாகக் காணப்படு கிறது. இதன் காரணமாக மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்லவில்லை.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய இந்திய இழுவைமடி மீனவர்கள் கட்டைக்காட்டு கடற்பரப் புக்கு ஒரு கிலோமீற்றர் கரை அருகேயே வந்து இழுவைமடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இலங்கை மீனவர்களுக்குச் சொந்தமான கடல் வளத்தை அவர்கள் சட்டவிரோத முறையில் கண்முன் அழித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

வெற்றிலைக்கேணிப் பகுதியில் இலங்கை கடற் படையின் மிகப்பெரிய கடற்படைத்தளம் அமைந்திருக்கின்ற போதிலும் கடற்படைத் தளத் துக்கு அண்மையாக வந்து இந்திய இழுவை மடிப் படகுகள் எந்தவித பயமுமின்றி அத்துமீறி மீன்பிடி யில் ஈடுபடுகின்றன.

வடமராட்சி மீனவர்களின் வாழ்வாதாரத்தை இந் திய இழுவைமடி மீனவர்கள் அழித்துச் செல் வதைத் தடுப்பதற்கு இதுவரை எந்தவித நிரந்தர முயற்சிகளையும் உரியவர்கள் எடுக் கவில்லை என மீனவர்கள் கவலை தெரிவித் துள்ளனர். (ச-27-66)

## இ.போ.ச. பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜன.10

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், ஒழுக்கமான சாரதி சமூகத்தை உருவாக்குவதற்கும் போக்குவரத்து அமைச்சு புதிய விசேட வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இலங் கைப் போக்குவரத்துச் சபையின் சாரதிகள் மற்றும் நடத்து நர்கள் போதைப்பொருள்களைப் பயன்படுத்தியுள்ளனரா என்பதைக் கண்டறியும் விசேட சோதனை நடவடிக்கைகள் நாடு தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விசேட வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் காலை மட்டக்குளி பேருந்து டிப்போ வளாகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம் பிக்கப்பட்டது. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம், போக்குவரத்து அமைச்சு, பொலிஸார் ஆகியோர் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## சுன்னாகத்தில் கந்தரோடை விகாரை பெயர்ப்பலகை நீக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.10

சுன்னாகம் சந்தியில் பொருத்தப்பட்டி ருந்த கந்தரோடை விகாரைப் பெயர்ப் பலகையை நீக்கி, ஒல்லாந்தர் காலத் தில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத் தொகுதியின் சிறப்பம்சங்கள் பற்றிய கல்வெட்டுப் பெயர்ப்பலகை புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளது.

கந்தரோடை தொல்லியல் ஆய்வு மையம் என்பதை மட்டும் அடையா ளப்படுத்தி பெயர்ப்பலகை பொருத்து வது பொருத்தமானதாகவிருக்கும் என்று வலிகாமம் தெற்குப் பிரதேச சபையில் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து பிரதேசசபையின் தீர்மானத்துக்கு அமைவாக, நேற்று முன்தினம் பெயர்ப்பலகை அகற்றப் பட்டு அந்த இடத்தில் ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத் தொகுதியின் சிறப்பம்சங்கள் பற்றிய கல்வெட்டுப் பெயர்ப்பலகை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. (க-66)

## யாழ்.பிரதேச செயலகத்துக்கு புதிய உதவிப் பிரதேச செயலர்



யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத் துக்குப் புதிய உதவிப் பிரதேச செயலாளராகத் திருமதி துஷியா கஜமுகன் நியமிக்கப்பட்டுள் ளார். இவர் நேற்று முன்தினம் வியாழக் கிழமை யாழ். மாவட்டச் செயலகத் தில் யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீ பனிடம் தனக்கான நியமனக் கடிதத் தைப் பெற்றுக் கொண்டார். (ச-41-66,9)

## 10 ஹெலிகொப்டர்களை வழங்கவுள்ள அமெரிக்கா

கொழும்பு, ஜன.10

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்த மான 10 ஹெலிகொப்டர்கள் இலங்கை விமானப்படைக்கு அன் பளிப்பாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கைக்கான அமெரிக் கத் தூதுவர் ஜூலீ சங் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட் டுள்ளார்.

இந்த ஹெலிகொப்டர்கள் இந்த மாதம் இலங்கையை வந்தடை யவுள்ளன என அவர் குறிப்பிட்டுள் ளார்.

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந் தமான 'பெல் 206 சீ ரேஞ்சர்' ரக ஹெலிகொப்டர்களே இலங்கை விமானப்படைக்கு வழங்கப்படவுள் ளன. (எ-இ)




## வட்ஸ்அப்பில வறுகினம்!

இலங்கை அரசாங்கம் தொட்டதுக்கும் ஆணைக் குழு அமைச்சைப் பேய்க்காட்டுறமாதிரி, சனங்களும் இப்ப எல்லா விசயங்களுக்கும் வட்ஸ்அப் குரூப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கினம். கந்தோர் வேலை செய்வோர் சங்கத்தில இருந்து கடையில கத்தரிக்காய் வாங்குவோர் குழு வரைக்கும் உந்த வட்ஸ்அப்பில கண்டதுக்கெல்லாம் வட்ஸ்அப் குரூப் வைச்சு, அதில மெசெஜ் போட்டு விளையாடுகினம். உந்த வட்ஸ்அப் குரூப்பால வைச்சு உழைக்கிறவையும் இருக்கினம். வெளிப்படையாச் செய்யமுடியாத மோசடியளை உப்பிடி வட்ஸ்அப் குரூப்கள் மூலம் செய்யிறவையும் இருக்கினம். அப்பிடி ஒரு வேலை யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில நடந்திருக்குது.

அங்க 'ஐ.சி.ரி' பாடம் எடுக்கிற பிள்ளையளுக்கு இந்தமாசம் 12 ஆம், 13 ஆம் திகதியளில 'வைவா' எக் ஸாம் (வாய்மொழிமூலப் பரீட்சை) நடக்க இருக்குது. அந்த எக்ஸாமை வைக்கிறதுக்கு கொழும்பில இருந்து ஒப்பீஸர்மார் வருகினமாம். அப்பிடி வாற ஒப்பீஸர்மார் வந்து தங்கிறதுக்கும், சாப்பிடுறதுக்கும் காசு வேணு மாம். அதுக்காக தொழில்நுட்பக் கல்லூரி லெக்சர் ஒருத்தர், வட்ஸ்அப் குரூப் ஒண்டை உருவாக்கி, அதில எல்லாப் பிள்ளையளிட்டையும் 'காசு போடுங்கோ' எண்டு ஓர்டர் போட்டிருக்கிறாராம். அப்பிடி லெக்சர் கேக்கேக்க எப்பிடிப் போடாமல் விடமுடியும்? காசு போடேலை எண்ட கறளை மனதுக்க வைச்சுக் கொண்டு, மார்க்ஸில கைவைச்சால் அந்தப் பிள்ளை யளின்ர வாழ்க்கை எல்லோ அநியாயமாப் போடும். அதால அவர் கேட்ட காசை போடப் போகினமாம். ஆனால் கொழும்பில இருந்து வாற அதிகாரிமாருக் குத் தேவையான எல்லாத்தையும் அரசாங்கமே செய்து குடுக்கும். இல்லாட்டி அதுக்கான காசைக் குடுக்கும். அப்பிடியிருக்க இந்த லெக்சர் எதுக்கு முந்தி ரிக்கொட்டை மாதிரி, தானே வலிய இப்பிடி வட்ஸ்அப் குரூப்பில பிச்சை எடுக்கிறார் எண்டு பிள்ளையளுக்கு டவுட்டும் இருக்குது.

இந்த விசயம் சாடைமாடையா தொழில்நுட்பக் கல் லூரி அதிபரின்ர காதுக்கும் போயிருக்குது. பசிடி என் னெண்டால், அதுமட்டும் அதிபருக்கு இப்பிடி வட்ஸ்அப் குரூப்பில அந்த லெக்சர் காசு சேர்க்கிற விசயமே தெரி யாதாம். அப்பிடி அதிபருக்கே தெரியாமல் ஏன் அந்த லெக்சர் காசு சேர்த்தவர் எண்டது இப்பவும் மர்ம மாத்தான் இருக்குது. ஒருவேளை கொழும்பு அதி காரியளுக்கு தண்ணி வெந்நி வாங்கிக் குடுத்து, அவையைக் குஷிப்படுத்தத்தான் உந்தக் கலெக்சனோ தெரியேலை. ஒருவேளை, அந்த லெக்சர் நல்ல எண் ணத்தோடயும் காசு சேர்த்திருக்கலாம். ஆனால் அரசாங்கம் அந்த அதிகாரிமாருக்கு போக்குவரத்துக்கும், தங்குமிடத்துக்கும், சாப்பாட்டுக்கும் தனியாக் காசு குடுக்கும். அதுதான் நடைமுறை. அந்த நடை முறைக்கு மேலதிகமா இப்பிடி பிள்ளையளிட்டப் பிச்சை எடுக்கிற அவையை இன்னும் வடிவாக் கவனிக் கோனுமெண்டு எந்தக் கட்டாயமுமில்லையே. அதை விட காசு விசயத்தைக் கையாளேக்க, அதைப்பற்றி உரியவையிட்ட அனுமதி எடுத்துத்தான் செய் யோனு மெண்டதும் அந்த லெக்சருக்குத் தெரியாதோ? உந்தத் தொழில்நுட்பக் கல்லூரியில மட்டுமில்ல, கன பள்ளிக்கூடங்களிலையும், ஒப்பீஸ்களிலையும் இப் பிடி வட்ஸப் குரூப்புகளை உருவாக்கி, காசு சேர்க்கிற விளையாட்டுகள் நடக்குதாம். எல்லாம் மலிஞ்சால் சந்தைக்கு வரத்தானே வேணும் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணை தொழிலாளர்கள் தேவை

கால்நடை விலங்குகளை மற்றும் தோட்டங்களை பராமரிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.
திருநெல்வேலியை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
ஆண்களுக்கு ரூபா - 65000/- , பெண்களுக்கு - 45000/- வரையும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- **077 354 9140**

(CS/660419) J-1

## நல்லூர்க் கந்தன்
### [திருமண சேவை]

**எம் அன்பார்ந்த உறவுகளுக்கு இனிய பொங்கல் வாழ்த்துக்கள்**
பிறந்திருக்கும் இவ் வருடத்தில் உங்கள் மகன்களுக்கு, மகள்களுக்கு வரன்களை விரைவாக தேடித்தருகின்றோம்.

**தொடர்பு: வி.ஜெயந்தி 077 9733 183**

குறிப்பு: பொங்களை முன்னிட்டு பதிவுக்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

(CS 31230) A

## 36ம் ஆண்டு நினைவு நாள்



**அமரர் நடராஜா சந்திரராஜா (போஸ்)**
(முன்னாள் - உரிமையாளர் குகன் ஸ்ரோாஸ் தலவாக்கலை)

மண்ணில்
20.02.1948

விண்ணில்
19.12.1989

திதி: சப்தமி (10.01.2026)

அன்பின் திருவுருவே எம் வாழ்விற்கு ஒளியூட்டிய
அப்பா ஆண்டுகள் 36 சென்றாலும் உங்கள்
அன்பு முகம் என்றும் என்றும் எம் நினைவில்
என்றென்றும் எமக்கு வழிகாட்டியாக இருந்து
ஆசிர்வதித்து தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பலாலி றோட், கோண்டாவில்.

என்றும் தங்கள் நினைவுகளுடன் வாழும் குடும்பத்தினர்

(CS 34223) E

## கேள்வி அறிவித்தல் - 2026

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்கண்ட ஐந்து (05) விற்பனைக் கூடங்களை மூன்று (03) வருட காலத்திற்கு மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்காக, தகுதியானவர்களிடமிருந்து மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்ப விநியோகம் : 12.01.2026 முதல் 26.01.2026 வரை (மு.ப. 9.00 - பி.ப. 3.00)
கேள்வி ஏற்கும் இறுதித் திகதி : 27.01.2026 மு.ப. 10.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி : 27.01.2026 மு.ப. 10.00 மணி
கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

முக்கிய நிபந்தனைகள்:

1. கேள்விதாரர் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் நிரந்தர வசிப்பிடமுடையவராக இருந்து, வாழ்வாதார நோக்கத்திற்காக ஆண் அல்லது பெண் எவரும் விண்ணப்பிக்க முடியும்.
2. தேசிய அடையாள அட்டை, கிராம அலுவலரின் நற்சான்றிதழ் மற்றும் வதிவிடச் சான்றிதழ், குடும்ப வதிவிட அட்டையின் நிழற்படப்பிரதி சமர்ப்பிக்க வேண்டும்.
3. கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா.1,000.00 மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா.1,500.00 செலுத்தி விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம்.
4. கேள்விகள் மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு பிரதிகளில் மூடிய தபால் உறைகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. ஆகக் குறைந்த மாத வாடகையை விடக் குறைவான கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.
6. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் மாத வாடகையின் மூன்று(03) மாதங்களுக்கான தொகையை முற்பணமாக செலுத்த வேண்டும். பாதுகாப்பு வைப்புத் தொகை செலுத்தி, அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 07 நாட்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.
7. மாதாந்த வாடகை அடுத்த மாதத்தின் 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். 10 ஆம் திகதி விடுமுறை அல்லது போயா தினமாக வரும் பட்சத்தில் 10 ஆம் திகதிக்கு முன்னர் வரும் அலுவலக நாளில் வாடகையைச் செலுத்த வேண்டும். அவ்வாறு 10 ஆம் திகதியன்று செலுத்த தவறினால் 10% வீதம் தண்டமாக செலுத்தவேண்டும்.
8. தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் வாடகை செலுத்தத் தவறினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.

❖ மேலதிக நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் சபையுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்திற்கமைவாக அமையும்.

கடைகளின் விபரம்

| தொ. இல | கடை இலக்கம் | இட அமைவு | வியாபாரத்தின் தன்மை | ஆகக் குறைந்த மாத வாடகை (வரிகள் நீங்கலாக) | கேள்வி வைப்பு பணம் | பாதுகாப்பு வைப்பு |
|---|---|---|---|---|---|---|
| 01 | இலக்கம்-01 | அக்கரை சுற்றுலா கடற்கரை, அச்சுவேலி | சிற்றுண்டி வகை தேனீர் | 10,000.00 (உபகரணங்கள் வாடகை உட்பட) | 1,500.00 | 100,000.00 |
| 02 | இலக்கம்-02 | அக்கரை சுற்றுலா கடற்கரை, அச்சுவேலி | குளிர்பானம், தின்பண்டங்கள் | 6,000.00 (உபகரணங்கள் வாடகை உட்பட) | 1,500.00 | 50,000.00 |
| 03 | இலக்கம்-03 | நிலாவரை சுற்றுலா மையம், புத்தூர் | உள்ளூர் உற்பத்தி பொருட்கள் | 6,000.00 | 1,500.00 | 50,000.00 |
| 04 | இலக்கம்-04 | பேருந்து நிலையம், அச்சுவேலி | சிற்றுண்டி வகை, குளிர்பானம் தின்பண்டங்கள் | 6,000.00 (உபகரணங்கள் வாடகை உட்பட) | 1,500.00 | 50,000.00 |
| 05 | இலக்கம்-05 | சிறுவர் பூங்கா, நீர்வேலி | சிற்றுண்டி வகை, குளிர்பானம் தின்பண்டங்கள் | 6,000.00 (உபகரணங்கள் வாடகை உட்பட) | 1,500.00 | 50,000.00 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அல்லது 021 205 8867 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தியாகராஜா நிரோஷ்
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.


2026.01.10




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பொய்யாமொழி

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்**

**பொருள்:** வாழ்க்கை எனும் பெருங்கடலை நீந்திக் கடக்க முனைவோர், தலையானவனாக இருப்பவனின் அடி தொடர்ந்து செல்லாவிடில் நீந்தமுடியாமல் தவிக்க நேரிடும்.


# பொதுப்பொறிமுறை தேவை...!

வங்களா விரிகுடாவில் அண்மைய நாள்களாக ஏற்பட்டிருந்த காற்றுச்சுழற்சி, இலங்கையர்களை, குறிப்பாக வடக்கு-கிழக்கு வாழ் மக்களைக் கிலிகொள்ள வைத்திருக்கின்றது. டித்வா போன்ற பேரழிவை எதிர்கொண்ட பின்னர், மீண்டும் ஒரு புயல் இலங்கையை நெருங்குவதும், இலங்கையின் கடற்பரப்பில் வட்டமிடுவதும் பேரச்சம்தரும் விடயங்களே. ஆதலால், இந்தக் காற்றுச் சுழற்சி மற்றும் தாழமுக்கம் தொடர்பில் மக்களுக்கு ஏற்பட்டிருந்த அச்ச உணர்வு சரியானது -யதார்த்தமானது. ஆனால், இந்த நிலைமையை அரசாங்கம் அல்லது அரச கட்டமைப்பு சார்ந்த திணைக்களங்கள் சரிவரக் கையாள்கின்றனவா? என்று கேட்டால், இல்லை என்பதே அதற்கான பதில்.

நவம்பர், டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில், காற்றுச்சுழற்சியையும் புயல் தொடர்பான அச்சப்பாடுகளையும் இயல்பாக எதிர்கொள்ளும் தீவு நாடான இலங்கை, உரிய விழிப்புணர்வை - உரிய வகையில் பொதுமக்களுக்கு முன்னறிவிக்கக்கூடிய திட்டங்களை இதுவரை கொண்டிருக்கவில்லை என்பதே கசப்பான உண்மை. இலங்கையில் வளிமண்டலவியல் திணைக்களமும், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமும் காலநிலை சார்ந்த முன்னறிவித்தலை விடுக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அவற்றின் வேகமும், வீச்சும் வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில், சில கட்டமைப்புக் குறைபாடுகளை எதிர்கொண்டிருக்கின்றன என்பது வெளிப்படையானது.

தற்போது இலங்கையைச் சுற்றித் திரிந்த காற்றுச் சுழற்சி, ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுநிலையாக மாறிய பின்னர்தான், அடுத்தகட்ட நடவடிக்கைகளை எமது துறைசார் திணைக்களங்கள் மேற்கொண்டன. அதுவரை அவை வெளியிட்டதெல்லாம் சம்பிரதாயபூர்வ அறிக்கைகள் மட்டுமே. இன்னும் சொல்லப்போனால், இலங்கையை அண்மித்து காற்றுச்சுழற்சி ஏற்பட்டதும், தமிழகத்தில் அதுசார்பான முன்னறிவித்தல் விடுக்கப்பட்டுவிட்டது. ஆனால், அதற்குப் பின்னரே, 'இந்திய எச்சரிக்கைக் குறிப்புகளில் உள்ள சாயல்களுடன்' இலங்கையர்களுக்கான முன்னெச்சரிக்கைகள் பிறப்பிக்கப்பட்டன. காலநிலை சார்ந்து துல்லியமான ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டிய ராடர்கள் இலங்கையில் இல்லை. இந்திய ராடர்களைத்தான் அதிகம் நம்பியிருக்கவேண்டியுள்ளது. உண்மையில் இதுவொரு பெருங்குறை மட்டுமல்ல. மாறாக, எமது தற்காப்பில் விடப்பட்ட மிகப்பெரும் வெற்றிடமுமே. எனவே, இந்த விடயத்தில் நிலைமைகளின் தீவிரத்தன்மையை உணர்ந்து, உரிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாக அமைந்துள்ளது.

இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில், காலநிலை சார்ந்த எச்சரிக்கைகள் அடித்தட்டு மக்கள் மத்தியில் இலகுவாகக் கொண்டுசென்று சேர்க்கப்படுகின்றன. உதாரணமாக, புயலின் ஆபத்தை வெளிப்படுத்தும் வகையில் இலக்கமிடப்பட்ட எச்சரிக்கைக் கூண்டுகள் துறைமுகங்களில் ஏற்றப்படும். அதுபோன்ற நடவடிக்கைகளை இலங்கையில் மேற்கொள்வதும் அவசியம். இவ்வாறான நடவடிக்கை இல்லாத காரணத்தால்தான், காலநிலை சார்ந்த ஆய்வுகளிலும், முன்னறிவித்தலிலும் தனிநபர்களின் செல்வாக்குகள் மேலோங்குவதை அண்மைக்காலமாக அவதானிக்கின்றோம். இதை சரி, பிழை என்பதற்கு அப்பால், அரச கட்டமைப்புகள் மூலமாகச் செய்வதே பொருத்தமானது. இல்லையேல், மேய்ப்பன் இல்லாத ஆடுகள் போன்று, எவரை நம்புவது எவர் பின்னால் செல்வது என மக்கள் குழம்பிப்போவார்கள். இந்தக் குழப்பம் அனைத்து வகைகளிலும் அழிவையே தந்து நிற்கும்.




## முன்பள்ளி ஆசிரியர்களது கொடுப்பனவு அதிகரிப்பு!



சிறுவர், மகளிர் விவகார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.10**

**முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு கடந்த ஜூலை மாதம் முதல் 6 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா போல் ராஜ் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முன்பள்ளிப் பாடத்திட்டம் ஒன்றை நாம் உருவாக்கியுள்ளோம். அதற்கு மேலதிகமாக பயிற்சிகள் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

13ஆவது அசரமைப்புத் திருத்தத்தின்படி முன்பள்ளிகள் மாகாண சபைகளால் கண்காணிக்கப்படுகின்றன. 9 மாகாணங்களில் முன்பள்ளிகள் வெவ்வெறு விதமாகச் செயற்படும் நிலையில், அவற்றைத் தேசிய கொள்கையின்கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

## ஜனாதிபதியின் ஆலோசகராக மஹிந்த பராக்கிரம நியமனம்

கொழும்பு, ஜன.10

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கடல்சார், துறைமுகங்கள் மற்றும் விநியோக அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆலோசகராக கலாநிதி மஹிந்த பராக்கிரம திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசமைப்பின் 41(1)ஆவது பிரிவின்படி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பூட்டுடைத்து தப்பிய கைதி

ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு, தங்காலை பொலிஸ்நிலையத்தில்தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் சிறையறைக் கதவின் பூட்டை வெட்டித் தப்பிச்சென்றுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தங்காலை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தப்பியோடிய சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச)

## கிணற்றில் வீழ்ந்து குழந்தை பலி

பேருவளை பகுதியில் கிணற்றில் விழுந்து மூன்று வயதுக் குழந்தையொன்று உயிரிழந்துள்ளது என்று பயாகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் பின்னால் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றிலேயே குழந்தை வீழ்ந்து உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## கனடாவில் வாகன விபத்து; யாழ்ப்பாணப் பெண் சாவு

ஒட்டாவா, ஜன.10

கனடாவில் இடம்பெற்ற வாகன விபத்தில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இஸ்லிங்டனில் தெற்கே பயணித்த பாரவூர்தி டிக்சனில் மேற்கு நோக்கிச் செல்ல வலதுபுறம் திரும்பும்போது, வீதியைக் கடக்கமுயன்ற பெண்மீது மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்



## விருச்சிகம்

எங்கும், எப்போதும் முதலிடத்தைப் பிடிக்க நினைக்கும் நீங்கள், தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பீர்கள். உங்களைச் சீண்டினால் எரிமலையாய் பொங்கி எழுவீர்கள்.

உங்கள் ராசிக்கு 7ஆவது ராசியில் சந்திரன் நிற்கும்போது இந்த ஆங்கிலப்புத்தாண்டுபிறப்பதால் புதிய முயற்சிகள் வெற்றியடையும். தடைப்பட்ட வேலைகள் அனைத்தும் உடனே முடியும். மாறுபட்ட அணுகுமுறையால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். கணவன்-மனைவிக்குள் நீயா நானா என்ற போட்டி மாறும். விட்டுக்கொடுத்துப் போவீர்கள்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 8ஆம் வீட்டில் நிற்பதால் வாகனத்தில் எச்சரிக்கை அவசியம். பணத்தைக் கவனமாக கையாளுங்கள். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 9ஆம் வீட்டுக்குச் செல்வதால் பணப்பற்றாக்குறை நீங்கும். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். சொந்த ஊரில் மதிப்பு, மரியாதை கூடும். ஊர்ப் பிரச்சினைகளில் தலையிட்டு முடிப்பீர்கள். 14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு 10ஆம் வீட்டுக்குச் செல்வதால் அலைந்து திரிந்து சில வேலைகளை முடிப்பீர்கள். முன்கோபத்தையும், விமர்சனத்தையும் தவிர்த்துவிடுங்கள். நண்பர்கள், உறவினர்கள் உங்கள் மீது வீண்பழி சுமத்துவார்கள்.

25.3.2026 முதல் 19.4.2026 வரை 6ஆம் வீட்டில் சுக்கிரன் மறைவதால், செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற போராடவேண்டிவரும். பேச்சைக் குறைத்துக் கொள்ளுங்கள். பார்வைக்கோளாறு வரக்கூடும். 2.8.2026 முதல் 18.9.2026 வரை 8ஆம் வீட்டில் செவ்வாய் மறைவதால், இரவு நேரத்துப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தந்தையாருக்கு அவ்வப்போது மருத்துவச் செலவுகள் வந்து போகும். வீண் வறட்டு கௌரவத்துக்காக செலவு செய்வதைத் தவிர்த்துவிடுங்கள். இந்த வருடம் முழுவதும் சனிபகவான் 5ஆம் வீட்டில் தொடர்வதால் பிள்ளைகளின் நட்பு வட்டத்தைக் கண்காணியுங்கள். அவர்கள் விரும்பும் பாடப்பிரிவில் படிக்க அனுமதியுங்கள். அப்போதுதான் அவர்கள் மனது ஒன்றி படிப்பில் ஆர்வம் காட்டுவார்கள். பூர்வீகச் சொத்தால் செலவுகள் வரும்.

டிச.4ஆம் திகதி வரை ராகு 4ஆம் வீட்டில் நிற்பதால் தாயாருக்கு உடல்நலம் பாதிக்கும். கேது 10ஆம் வீட்டில் நிற்பதால் பணிச்சுமை அதிகரிக்கும். யாரையும் விமர்சிக்க வேண்டாம். டிச. 5ஆம் திகதி முதல் ராகு 3ஆம் வீட்டுக்கு வருவதால் தடைகள் விலகும். பெரிய பதவிகள் பொறுப்புகள் தேடிவரும். புது வேலை கிடைக்கும். இல்லத்தரசிகளுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். கணவரின் கோபம் தணியும். உங்களின் நிர்வாகத் திறமையைக் கண்டு மெச்சுவார். அடகிலிருந்த நகைகளை மீட்பீர்கள். கன்னிப்பெண்களுக்குத் தடைப்பட்ட கல்யாணம் நல்ல விதத்தில் முடியும்.

வியாபாரத்தில் புதிய முயற்சிகளில் வெற்றியும் உண்டு. வங்கியில் பலமுறை கடனுதவி கேட்டும் ஏதோ சில காரணங்களால் தடைப்பட்டுவந்த நிலை மாறி, இனி உங்களைக் கூப்பிட்டு கடனுதவி கொடுப்பார்கள்.

உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடித்து வெற்றி பெறுவீர்கள். மேலதிகாரி உங்களுக்கு ஆதரவாகத்தான் இருப்பார். எனினும் பணிச்சுமைக்கு குறைவிருக்காது. சக ஊழியர்களுடன் சலசலப்பு உண்டு. கணினித் துறையினருக்கு பதவியுயர்வு, சம்பள உயர்வு தடைப்பட்டாலும் போராடிப் பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு நழுவிப்போன வாய்ப்புகள் மீண்டும் தேடிவரும். அடுத்தவரைப் பற்றி விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

மொத்தத்தில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு, மன உறுதியுடன் புதிய அணுகுமுறையால் எதிலும் வெற்றிபெற வைப்பதாக அமையும்.

**பரிகாரம்: பைரவரை சனிக்கிழமை மற்றும் அஷ்டமி திதி நாள்களில் நல்லெண்ணெய் தீபமேற்றி வணங்குங்கள். எதிலும் வெற்றி கிட்டும்.**



தருமபுரத்தில்

# பலநாள் ஆட்டுத் திருடர்கள் நேற்றுமுன்தினம் மாட்டினர்!

கிளிநொச்சி, ஜன.10

கிளிநொச்சி தருமபுரம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் நீண்டகாலமாக இடம்பெற்றுவந்த ஆடுகளைத் திருடிய சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்களை தருமபுரம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் வீதியோரங்களிலும்,ஆள் நடமாட்டமற்ற இடங்களிலும் நிற்கும் ஆடுகள் மர்ம நபர்களால் களவாடப்பட்டு வந்தன.

தமது ஆடுகள் திருடப்பட்டமை குறித்து உரிமையாளர்களால் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. இதுகுறித்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையின்போது இரண்டு சந்தேகநபர்களைக் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் திருடப்பட்ட 5 ஆடுகள் மீட்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.திசாநாயக்க தெரிவித்தார். (ச-113)

# யாழ். பாரவூர்தி கூட்டுறவுச் சங்கத்தால் கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களின் பாடசாலை செல்லும் 116 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சங்கத்தின் தலைவர் ஜெயக்குமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.



பிரதம விருந்தினராக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கி வைத்தார். நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.குருபரன், நா.ஜெயவதனன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-17)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழி உறவுகள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கடகம்:** பிள்ளைகள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். இளைய சகோதரர்களால் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாள். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் சஞ்சலத்தை ஏற்படுத்தும்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். [illegible]

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள்.

**மகரம்:** பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு சகோதரர்கள் மூலம் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டினோஜா மரணம்

## சுகாதார அமைச்சால்மேலதிக விசாரணை

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்த 12 வயதுச் சிறுமியான குகநேசன் டினோஜாவின் மரணம் தொடர்பில் சுகாதார அமைச்சு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகசுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில்அவர்இதனைத் தெரிவித்தார். தற்போது மருத்துவமனை மற்றும் மாகாண மட்டத்தில் தனித்தனியாக முன்னெடுக்கப்பட்ட ஆரம்பக் கட்ட விசாரணைகளின் அறிக்கைகள் சுகாதார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அந்த அறிக்கைகளின் பிரகாரம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார். (ச)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 26.12.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**நாகரட்ணம் மயில்வாகனம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ் பரியோவான் கல்லூரி, சென் தோமஸ் கல்லூரி, கொள்ளுப்பிட்டி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.01.2026) சனிக்கிழமை "கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும்" தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வானது "அன்னாரின் இல்லத்திலும்" நடைபெற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (11.01.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் "யாழ் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்திலும்" நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். குடும்பத்தினர்

95, செட்டித்தெரு, நல்லூர்.
070 221 9107, 074 354 5115

## 6 ஆம் ஆண்டு நினைவில்

அமரர்

**திருமதி தேவராசா ஆனந்தி**



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 07.09.1969 | 18.12.2019 |

திதி: தேய்பிறை சப்தமி


ஆனந்தியெனும் ஆனந்தப்பூங்காற்றாகி
வான்நதியென பாசமழை பொழிந்து
தேனென இனித்திடும் எம் வாழ்வுதனை
கானலாக்கி உங்களைக் காலன் கவர்ந்து
ஆறாண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறாத்துயரோடு உங்கள் நினைவோடு
தேற்றுவாரின்றி தேம்பியழுகின்றோம்!

தொல்புரம் மேற்கு
சுழிபுரம்

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26 . 11 . 1945 | 06 . 01 . 2026 |



**கதிர்காமத்தம்பி சித்திரவேல்**

திருகோணமலை சாம்பல்தீவை பிறப்பிடமாகவும். கிளிநொச்சி செல்வாநகரையும். தற்போது மாகியப்பிட்டி. சண்டிலிப்பாய். யாழ்ப்பாணத்தையும் வதிவிடமாகக் கொண்ட கதிர்காமத்தம்பி சித்திரவேல் அவர்கள் கடந்த 06.01.2026 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றும் நாகரட்ணம் ஆகியோரின் மருமகனும். புஸ்பரட்ணம் (புஸ்பம்) அவர்களின் அன்புக் கணவரும். சங்கீதா. காலஞ்சென்ற சஞ்ஜீவ் மற்றும் சுஜீவ் ஆகியோரின் அன்புத் தந்தையும். கம்சன். ஜெனித்தா ஆகியோரின் மாமனாரும். அஸ்னா. அஸ்மித் ஆகியோரின் பேரனும். இராமநாதன் அவர்களின் சகோதரனும். ஜெயம். மகேஷ். கருணா. லக்னா. கமலேஷ். மனோகரன். செல்வி ஆகியோரின் மைத்துனரும். தேவன். சண்முகம். ரவிச்சந்திரன். செல்வி. வசந்தி. ராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்துப்பனையடி. அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 65410) E

மாகியப்பிட்டி சந்தி அருகாமை,
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 0366 552

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1937.06.22 | 2024.12.22 |

திதி : 2026.01.10 - மார்கழி மாத அபரபக்க ஸப்தமி

எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் குலசேகரம் குணபாலசிங்கம்**

யா/இந்துக் கல்லூரி, காரைநகர் (முன்னாள் ஆசிரியர்)
யா/யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர் (முன்னாள் ஆசிரியர்)
யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர்)

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம், எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல், கனகாலம் இருப்பீர்கள்....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


(CS 604123) E

பண்ணாகம்,
சுழிபுரம்

தகவல்: குடும்பத்தினர்
021 225 2130

## 3ம் ஆண்டு நினைவேந்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 04 . 1950 | 10 . 01 . 2023 |



அமரர் **கைலாசபிள்ளை சீவரத்தினம்**
(பஞ்சலிங்கம்)
(யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி முன்னாள் ஆசிரியர்)

ஆண்டுகள் மூன்று
கடந்த போதிலும் உங்கள்
அன்பு முகம் என்றென்றும்
எம் கண் முன்னே

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## புதிய உதவிப் பிரதேச செயலர் கரவெட்டிக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.10

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குப் புதிய உதவிப் பிரதேச செயலராக செல்வரட்ணம் சாருதர்ஷன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் கடந்த திங்கட்கிழமை வழங்கினார். இவர் கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் தனது கடமைகளையும் பொறுப்பேற்றுள்ளார்.

(க-27)

## நினைவு

ஆறுதல் நிறுவனத்தின் ஸ்தாபகர் மற்றும் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவின், மூன்றாம் ஆண்டு நினைவு தினம் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு, யாழ்ப்பாணத்திலுள்ள ஆறுதல் அலுவலகத்தில் இடம்பெறும். வவுனியாப் பல்கலைக்கழக வேந்தர் பேராசியர் சு. மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நினைவுப்பேருரையை, யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மகாலிங்கம் சத்தியகுமார், 'இலங்கையின் புதிய கல்விச் சீர்திருத்தம்;ஓர் ஆய்வுத் திசைமுகத்தினூடான வித்தியாநோக்கு' எனும் தலைப்பில் ஆற்றுவார்.

(க)

# குமார் பொன்னம்பலம் நினைவேந்தல் நிகழ்வு



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், வழக்கறிஞருமான மாமனிதர்.குமார் பொன்னம்பலத்தின் 26ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, கொக்குவிலில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலய மண்டபத்தில் கடந்த திங்கட்கி ழமை இடம்பெற்றது. தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் ந. ஸ்ரீகாந்தா, தமிழ்த்தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் தி.நிரோஷ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் பொன் மாஸ்ரர் ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்தினர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

(க-66)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**உயர் பட்டப்படிப்புகள் பீடம்**
**புதிய அனுமதிகள்**

**பிரதேச திட்டமிடல் முதுமாணி (அணி IV)**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 26.01.2026
மேலதிக தொடர்புகளுக்கு 021 222 3608

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

(CR/46870) J-1



# காணி விற்பனைக்கு

**யாழ்.அச்சுவேலியில் காணி விற்பனைக்குண்டு**


- 34 பரப்புக் காணி இரண்டு பரப்பாக பிரித்த நிலையில் விற்பனைக்கு உண்டு.
- அச்சுவேலி நகரிலிருந்து 400m தூரம்
- அச்சுவேலி பொலிஸ் நிலையத்திலிருந்து 200m தூரம்
- அன்னை திரேசா கொன்மென்ற் பாடசாலையிலிருந்து 200m தூரம்
- சமுர்த்தி வங்கியிருந்து 200m தூரம்
- நன்னீர் ஊற்று, குடியிருப்பு சூழல், வீடுகள் கட்ட உகந்த காணி.
- இன்னும் சில துண்டுகள் மாத்திரம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:- 076 755 8606**
**077 605 5917**

(CS 31228) A


# மரண அறிவித்தல்

தோற்றம்
29
.
10
.
1959



மறைவு
09
.
01
.
2026

**சோமசுந்தரம் சிவகுமார் குருக்கள்**

74/15 நெடுங்குளம் பிள்ளையார் கோவில், கொழும்புத்துறையைச் சேர்ந்த சோமசுந்தரம் சிவகுமார் அவர்கள் நேற்றுமுன்தினம் (09.01.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.01.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 580 3572

74/15 நெடுங்குளம் பிள்ளையார் கோவில்,
கொழும்புத்துறை.

(CS/60421) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
03
❖
03
❖
1933



இறப்பு
07
❖
01
❖
2026

## பொன்னம்பலம் வள்ளிநாயகி

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியை பிறப்பிடமாகவும் தெஹிவளையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளிநாயகி பொன்னம்பலம் அவர்கள் 07.01.2026 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (BRANDY), சிவபாக்கியம் தம்பதியினரின் அருமை மகளும் அமரர் வேலுப்பிள்ளை பொன்னம்பலம் (கல்கமுவா ஸ்ரோஸ்) அவர்களின் பாசமிகு மனைவியும், அமரர்களான கல்கமுவா வேலுப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், நித்தியானந்தன் (HNB RTD) அமரர் சர்வானந்தன் (SWISS), தயானந்தன் (SWISS), சச்சிதானந்தன் (UK), அமரர் விபுலானந்தன் (JAFFNA CENTRAL COLLEGE) , கீதா அவர்களின் அன்பு தாயாரும், அமரர் விஜயலக்ஷ்மி, நகுலாம்பிகை (USA), அரியரட்ணம் (ARIYARATNAM & CO) ஆகியோரின் அன்பு சகோதரியும், அமரர்களான முருகேசு, லோகநாதன் (YAPAN JEWELLES) சிவகற்புக்கரசி ஆகியோரின் மைத்துனியும் பத்மசோதி, பதிசக்தி, ஹேமமாலினி, சாந்தினி, ஞானவேல் ஆகியோரின் அன்பு மாமியும், Dr.மயூரன், Dr.நிவேதிதா, ஜனகன், Dr.லேகாஜினி, அபிராமி, ராகவன், அச்சுதன், அஜந்தன், ராகவன், சங்கவி, ஹறிணி ஆகியோரின் அன்பு பேத்தியும் நரேன், ஆதிரன், ஆரியன், மீனாட்சி, ஆரதி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையின் சனிக்கிழமை (10.01.2026) அன்று 10 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (11.01.2026) அன்று காலை 8.30 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி 10.30 மணிக்கு பொரளை இந்து மயானத்தில் அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:– குடும்பத்தினர்
11C, ATAPATHU MAWATHA DEHIWELA
Tel: 2739934, 0774 425 777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிணையில் வெளிவந்த டக்ளஸ் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

டக்ளஸின் தனிப்பட்ட பாவனைக்கு வழங்கிய துப்பாக்கி பாதாளக் குழுத் தலைவரிடம் இருந்து மீட்கப்பட்ட வழக்கில், பிணையில் வெளிவந்த பின்னர் ஜனாதிபதிக்கு டக்ளஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

'என்னைக் கைதுசெய்த பின்னர் எனது மக்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும் கவலையையும் என்னால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. நான் விடுவிக்கப்பட்டுள்ளேன். இவ்வேளையில் ஜனாதிபதி அநுரவுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். அதுபோல் என்னை விடுவிப்பதற்கு உதவிய ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரஸுக்கும் அவருடையகுழுவினருக்கும் எனது நன்றிகள்' என்று டக்ளஸ் மேலும் கூறியுள்ளார். (ம)

## தெஹிவளையில் சூடு ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜன. 10

தெஹிவளை கடற்கரை வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் விடுதியொன்றின் உரிமையாளர் உயிரிழந்துள்ளார்.

விடுதிக்கு முன்பாக மது அருந்திக் கொண்டிருந்த இரு நபர்கள், திடீரென விடுதியின் உரிமையாளரை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். (ம-இ)

## யாழ். நகரில் விபத்து; ஒருவருக்குப் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 10



யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில், இளைஞர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

அதிவேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள், வாகனமொன்றுடன் மோதியதைத் தொடர்ந்தே இந்த விபத்து சம்பவித்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயம் அடைந்த நிலையில், அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-26)


### வீட்டு வேலையாளர் தேவை

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள வீடு ஒன்றிற்கு, வீட்டுச் சமையலுக்கு உதவுதல், வீட்டு வேலைகள் மற்றும் ஆண் முதியவர் ஒருவரைப் பராமரிக்க பணியாளர் உடன் தேவை

தொடர்பு:- 078 900 8006


# முல்லைத்தீவுக் கடலில் தமிழக மீனவர் மாயம்

முல்லைத்தீவு, ஜன.10

முல்லைத்தீவுக் கடலில், தமிழகத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவர் இழுவைமடிப்படகில் இருந்து தவறி வீழ்ந்துள்ளார். தமிழகம் நாகபட்டினத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை தொழில் நடவடிக்கைக்காக வந்த படகு, முல்லைத்தீவுக் கடலுக்குள் ஊடுருவியுள்ளது. இதன்போது அண்மையில் குறித்த மீனவர் படகில் இருந்து கடலில் தவறி வீழ்ந்துள்ளார். நாகபட்டினத்தைச் சேர்ந்த அறிவு அன்பழகன் என்பவரே இவ்வாறு கடலில் வீழ்ந்துள்ளார். இவரைக் கண்டுபிடித்துத் தருமாறு உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் (க-19)

## கலைவிழா!

யாழ், ஜன. 10

திருநாவலூர் நாவலர் இலவச பாலர் கல்வி நிலையமும், நாவலர் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் 'கலை விழாவும், நாவலர் குருபூசை விழாவும்' இன்று இடம்பெறவுள்ளது. மேலைப்பலோலி சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில், நாவலர் சனசமூக நிலையத் தலைவர் வே.நந்தகுமார் தலைமையில் காலை 9 மணிக்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் புவனேந்திரன் ரமேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ம)


## மரண அறிவித்தல்

### இராஜமனோரஞ்சிதம் சேனாதிராஜா (மணி)

தோற்றம் 05.04.1936 — மறைவு 09.01.2026

மானிப்பாயை பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜமனோரஞ்சிதம் சேனாதிராஜா நேற்று (09.01.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜா சேனாதிராஜாவின் அன்பு மனைவியும், கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா (முன்னாள் நடனத்துறை தலைவர், யாழ். பல்கலைக் கழகம்) திரு. கிருஷ்ணமோகன் (RSK Farm, உடுவில்), திரு.கிருஷ்ணகுமார் (கிருஷ்ணா Farm - மானிப்பாய்), திரு. பாஸ்கரன் (காசாளர், தினேஷ் வெதுப்பகம், (மானிப்பாய்), திருமதி கிருஸ்ணரூபினி லவன், திரு. கனேஸ்குமார் (RSK Farm, உடுவில்), திரு. கிரிசாந்தன் (RSK Farm, உடுவில்) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2026) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பச்சு வீதி, உடுவில்.

தகவல்: குடும்பத்தினர்.

CS 312341A



## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை



முன்னனி நிறுவனத்தில் இணைந்து பணியாற்ற, சுறுசுறுப்பும் அர்ப்பணிப்பும் மிக்க பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (Security Officers) உடனடியாகத் தேவைப்படுகிறார்கள்.

- வயதெல்லை: 19 -60 வயதிற்குட்பட்டவர்கள்
- சம்பளம்: 40,000 - 70,000 ரூபா வரை (அனுபவம், கல்வித்தகைமை என்பவற்றுக்கமைய தீர்மானிக்கப்படும்)



ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

உங்கள் சுயவிபரக் கோவையை மின்னஞ்சலிலோ அல்லது தபாலிலோ சமர்ப்பிக்கலாம்.

மின்னஞ்சல்: apply.vacancy2026@gmail.com

P.O. Box - 23



## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 12 . 1958



இறப்பு 08 . 01 . 2026

### செல்வி காசிநாதன் பானுமதி

யாழ். 3ம் கட்டை கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி காசிநாதன் பானுமதி அவர்கள் (08.01.2026) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதன் - மாதற்கரசி தம்பதியினரின் அன்பு மகளும், தில்லைநாயகி, கமலேஸ்வரி, காந்திமதி, ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் காலஞ்சென்றவர்களான ஸ்ரீபதிநாதன், ஹரிசுந்தரா, சாந்தினி ஆகியோரின் சகோதரியும், பாலசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், ஸ்ரீறஞ்சினி, லதா மற்றும் காலஞ்சென்றவர்களான ரங்கநாதன், கைலாசபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

3ம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.


தகவல்: குடும்பத்தினர். 074 075 1983

(CS 311224) ER



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்னை மடியில் 20.11.1949



இறைவன் கையில் 11.12.2025

கடந்த 11.12.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

### திருநாவுக்கரசு கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர், பூநகரி)


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 08.01.2026 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.01.2026) சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

GPS விளையாட்டரங்கு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.


குடும்பத்தினர். 077 364 6301

(CS 31227)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தூய்மையான நாடு ஆரோக்கியமான வாழ்க்கை"எனும் நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் மூன்று நாள்கள் டெங்குக் கட்டுப்பாட்டுக் களத் தரிசிப்பும் சிரமதானமும் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.
பொது நிர்வாக, மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (ச-41-9)



## முதியோர்களுக்கு தியானப்பயிற்சி

சாவகச்சேரி, ஜன.10
எழுதுமட்டுவாழ் பிரிவு முதியோர்களுக்கான யோகா, தியானப் பயிற்சிகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.
எழுதுமட்டுவாழ் முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்தின் தலைவர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச சமூக மருத்துவ அலகின் உத்தியோகத்தர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (ச-41-9)




## டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், ஜன.10
'வளமான நாடும் அழகான வாழ்க்கையும்' என்ற தொனிப்பொருளின் கீழ் பேரிடருக்குப் பின்னரான சுகாதாரம் மற்றும் டெங்கு ஒழிப்பு தேசிய வேலைத் திட்டம் பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.
பொதுநிர்வாக, மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகள், முன்பள்ளிகளில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இதில் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினர், பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினர், பருத்தித்துறைப் பொலிஸார், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் ஆகியோர் இணைந்திருந்தனர். (ச-41-100)

## 120 முன்பள்ளி மாணவர்களுக்கு விசுவமடுவில் கற்றல் உபரணங்கள்

முல்லைத்தீவு, ஜன.10
புதுக்குடியிருப்புப் பிரதேசசபைத் தவிசாளர் வே. கரிகாலனின் ஒழுங்குபடுத்தலில் விசுவமடுப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளைச் சேர்ந்த 120 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப் பட்டுள்ளன. விசுவமடு மத்தி முன்பள்ளியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேசசபைத் தவிசாளர் வே. கரிகாலன் மற்றும் ஓய்வு பெற்ற அதிபர்.முன்பள்ளி ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-19)





## அரச சேவையில் டிஜிற்றல்; மன்னாரில் பயிற்சிப்பட்டறை

மன்னார், ஜன.10
இன்றைய டிஜிற்றல் யுகத்தில் ஒற்றுமையான மற்றும் பொறுப்புமிக்கதொரு சமூகத்தை உருவாக்கும் நோக்கில், அரச சேவை வழங்குநர்களை வலுப்படுத்தும் விசேட பயிற்சிப்பட்டறை ஒன்று கடந்த புதன்கிழமை மன்னாரில் நடைபெற்றது.
மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இந்தச் பயிற்சிநெறி இடம்பெற்றது. சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிற்றல் தளங்களில் நிலவும் சவால்களை எதிர்கொள்வது குறித்து அரச உத்தியோகத்தர்களுக்கு இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது. இதில் சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷான் வளவாளராகக் கலந்துகொண்டு சட்ட ரீதியான மற்றும் சமூக ரீதியான ஆலோசனைகளை வழங்கினார். (ச-60)



வளமான நாடும் அழகான வாழ்க்கையும், தூய்மையான நாடும் ஆரோக்கியமான வாழ்க்கையும் என்ற தொனிப் பொருளில், பேரிடருக்குப் பின்னரான சுகாதார மற்றும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஊர்காவற்றுறை பிரதேசசபையால் 3 நாள்கள் முன்னெடுக்கப்பட்டன. (க-9)



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயக் கல்விக்கூடத்தின் முன்பள்ளி அங்குரார்ப்பண விழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமரா கொள்வனவுக்காக

# யாழ். மாநகரசபையில் 30 நிமிடங்கள் விவாதம்!

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்பாணம் மாநகரசபையின் தேவைக்காக, கமராவொன்றைக் கொள்வனவு செய்வதா? இல்லையா? என்பது தொடர்பில் சபையில் நேற்று நீண்ட விவாதம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நேற்றைய அமர்வின்போது, சபையின் தேவைக்காகவும், முதல்வரின் பயன்பாட்டுக்காகவும் கமராவொன்றைக் கொள்வனவு செய்வது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது. 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அந்தக் கமராவை, தனது தனிப்பட்ட தேவைக்காக அல்லாமல், சபை நடவடிக்கைக்குத் தேவையெனில் கொள்வனவு செய்யுமாறு முதல்வர் அறிவுறுத்தினார்.

இதையடுத்து, 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிட்டு கமராவைக் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என சிலரும், கமராவைக் கொள்வனவு செய்ய வேண்டும் என வேறு சிலரும் வலியுறுத்தினார்கள். இதையடுத்தே இந்த விவாதம் 30 நிமிடங்களுக்கு மேலாக நீடித்தது.

இறுதியில், கமராவைக் கையாள்வதற்கான உத்தியோகத்தரை அடையாளம் கண்ட பின்னர் அதைக் கொள்வனவு செய்வது என்;று தீர்மானிக்கப்பட்டது. (ம26)

யாழ்ப்பாணம் மாநகரசபையில்

## ஊடகவியலாளர்களின் பகுதியில் வெளிநபர் ஒருவருக்கு அனுமதி!

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நேற்றைய அமர்வில், ஊடகவியலாளர்களுக்கு என ஒதுக்கப்பட்ட பகுதியில், வெளிநபர் ஒருவர் அனுமதிக்கப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்த அமர்வு முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே, ஊடகவியலாளர்களின் பகுதிக்குள் வெளிநபர் ஒருவர் அமர்ந்திருந்து சபை நடவடிக்கைகளை வீடியோவாகப் பதிவு செய்தார். அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் யாழ்ப்பாண மாநகர உறுப்பினர் ஒருவரின் ஏற்பாட்டிலேயே அவர் சபையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்த உறுப்பினரின் ஒத்துழைப்புடன் சிறிய ஒலிவாங்கி ஒன்றையும் அந்த நபர் கூட்டம் நடைபெற்ற மண்டபத்துக்குள் வைத்திருந்தார். இதையடுத்து, மாநகரசபை அமர்வு தொடர்பான வீடியோக்கள் குறித்த மாநகரசபை உறுப்பினரின் பக்கத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டன.

ஊடகவியலாளர்களை மாநகரசபை அமர்வுக்குள் அனுமதிக்கும்போது, அவர்களின் அடையாள அட்டைகளை பரிசோதிக்கும் மாநகர நிர்வாகம், தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி வரும் வெளிநபர்களை எவ்வாறு அனுமதித்தது? என்ற கேள்வி எழுந்துள்ளது.

குறித்த வெளிநபருக்கு ஒத்துழைப்பு வழங்கிய மாநகரசபை உறுப்பினரே, கடந்த அமர்வின்போது பேஸ்புக்கில் நேரலை செய்து சர்ச்சைக்கு உள்ளாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம26)

### டக்ளஸ்...

புக்காக இராணுவத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கி, 2019ஆம் ஆண்டு பாதாளக் குழு உறுப்பினரிடம் இருந்து மீட்கப்பட்டிருந்தது. இந்த விவகாரத்தில் கடந்த மாதம் 26ஆம் திகதி டக்ளஸ் கைது செய்யப்பட்டிருந்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, டக்ளஸ் தேவனந்தாவை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-ம-26)

### கழிவுகள்...

யாழ்ப்பாணம் மாநகரசபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள், கல்லுண்டாய் வெளியில் உள்ள 9.59 ஹெக்ரேயர் விஸ்தீரணம் உடைய அரச காணியிலேயே தற்போது அகற்றப்பட்டு வருகின்றன. அந்தக் காணியையே யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான ஆதனமாக மாற்றுவது தொடர்பில் சபையின் நேற்றைய அமர்வில் விவாதிக்கப்பட்டது.

இதையடுத்து, அந்த ஆதனம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு அவசியம் எனவும், இது தொடர்பான கோரிக்கையை ஜனாதிபதி அநுரவிடம் முன்னிலைப்படுத்துவது என்றும் சபையால் ஏகமனதாகதீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ-ம-26)

### யாழ்...

ராஜா காட்டமாகக் கூறினார். யாழ்ப்பாணம் மாநகரசபையின் அமர்வு மேயர் மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது மாநகரசபையின் பதவிநிலை அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதன்போதே, யாழ்.மாநகர அதிகாரிகளின் பணிமீது மேயர் மதிவதனி தனது அதிருப்தியை வெளியிட்டார்.

இதன்போது, 'மாநகரசபையில் சிறிய வேலையைச் செய்வதற்குக்கூட மாநகரசபை உத்தியோகத்தர்கள் அதிக காலத்தை எடுக்கின்றனர். எமக்கு உரிய மரியாதையை அவர்கள் வழங்குவதில்லை. சபையில் நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்கும்போது, அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நிர்வாகத்துக்குப் பொறுப்பாக உள்ள ஆணையாளருக்கும் அதிகாரிகளுக்கும் உள்ளது. அதைச் செய்யாமல் தவிர்க்கும்போது மக்களின் நலன் சார்ந்து நாங்கள் கேள்வி கேட்போம் என்று மாநகர உறுப்பினர்களும் தெரிவித்தனர். (அ-ம-26)

### கல்லுண்டாய்...

தவிசாளர் உதயனுக்குத் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாநகரசபையின் நேற்றைய தீர்மானம் தொடர்பில் தொடர்பு கொண்டு வினவியபோது அவர் மேலும் தெரிவித்தாவது:-

கல்லுண்டாயில் திண்மக் கழிவுகள் சேகரிக்கும் காணியை யாழ்ப்பாணம் மாநகரசபை பயன்படுத்துவதற்கு தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்தக் காணியை தமக்குத் தருமாறு அல்லது நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குமாறு யாழ்ப்பாணம் மாநகரசபையினர் இதற்கு முன்னரும் கோரியிருந்தனர். குறிப்பாக, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற காணிக் குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், அந்தக் கோரிக்கையை நாங்கள் நிராகரித்தோம்.

வலிகாமம் தென்மேற்கு சபையிலும் இது தொடர்பில் ஆராய்ந்து, அந்தக் காணியை எவருக்கும் வழங்க முடியாது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

### சிறுமியை...

மாதம் 18ஆம் திகதி குறித்த சிறுமியை அந்த நபர் கடத்திச் சென்று வன்புணர்வு செய்தார் என்று பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி சந்தேகநபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன.

சந்தேகநபருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், இந்த வழக்கு நேற்று தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே, குற்றவாளிக்கு 10 வருடகால சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது. தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறின் 2 மாதகால சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அத்துடன், சிறுமிக்கு 2 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்றும், தவறின் ஒரு வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம-110)

### உள்ளூராட்சி...

என்றும் பிரதமர் ஹரிணி உள்ளிட்ட அரச மேலிடங்களுக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதையடுத்தே இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. விசாரணைகளுக்கு அமைய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுநிர்வாக அமைச்சக மட்டங்களில் இருந்து அறிய முடிகின்றது. (அ-ம-26)

### தமிழாராய்ச்சிப்...

நடைபெறவுள்ளன. 1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. இதன்போது ஏற்பட்ட கலவரத்தில் 11 பேர் கொல்லப்பட்டனர். இந்தப் படுகொலைகளின் 52ஆவது ஆண்டு நினைவேந்தலே இன்று என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-17)

### நம்பிக்கையில்லாப்...

ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுனவின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள். தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் பக்கம் நிற்கின்றனர் என்றால், பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

### யாழ்.மாநகரசபை...

றன. இவ்வாறான பின்னணியிலேயே, யாழ்ப்பாணம் மாநகரசபையின் எதிர்வரும் அமர்வுகளில் பங்கேற்க முடியாது என மேயர் மதிவதனிக்கு ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் மாநகரசபை கூட்டத்தில் பங்கேற்பது தொடர்பாக மாநகரசபையின் கட்டளைச் சட்டங்களிலோ அல்லது மாநகரசபையின் நியம துணை விதிகளிலோ இல்லை. ஆதலால், சபையின் அமர்வுகளில் எதிர்வரும் காலங்களில் பங்கேற்க முடியாது. சபை அமர்வு குழுநிலை கூட்டங்களாக மாற்றப்படும் சந்தர்ப்பங்களில், மாநகரசபை ஆணையாளரின் ஆலோசனை தேவை என கருதும் பட்சத்தில் அழைக்கப்பட்டால் அதில் பங்கேற்பேன் - என்றுள்ளது. (அ-ம-26)

### யாழ்ப்பாணத்தின்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலைக்கு அருகாகக் காணப்படும் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் தொடர்ச்சியாக வடக்கு நோக்கி நகர்ந்து வருகிறது. ஒரு மணித்தியாலத்துக்கு மூன்று தொடக்கம் 5 கிலோமீற்றர் வேகத்திலேயே இந்தக் காற்றழுத்தம் நகர்கின்றது. இது இன்று காலை முல்லைத்தீவை அண்மித்து வடக்கு மாகாணத்தின் நிலப்பகுதியில் நுழைந்து பின்னர் யாழ்ப்பாணத்தினூடாக பாக்கு நீரிணைக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கிடைத்து வரும் தூறல் மற்றும் மிதமான மழை படிப்படியாக அதிகரிக்கும். வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு மாகாணத்தின் பல இடங்களிலும் கடல் மிக கொந்தளிப்பான நிலையில் காணப்படுவதால் சில இடங்களில் கடல்நீர் உள்வரும் செயற்பாடும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை நாளை மாலை வரை நீடிக்கும்.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் குளிரான வானிலை நிலவுகிறது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு மாகாணத்தின் ஊடாக ஈரப்பதனை உள்ளிழுப்பதனாலேயே இந்த குளிரான நிலைமை காணப்படுகின்றது. இந்த ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வடக்கு மாகாணத்தை விட்டு வெளியேறியதன் பின்னர் குளிர் குறைவடையும். எனவே இந்த நிலைமைகள் தொடர்பில் மக்கள் தொடர்ந்தும் அவதானமாக இருப்பது அவசியம் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிகப் பதவிகளில் உள்ளவர்கள்தமிழரசுக் கட்சிக்கு சேறுபூச முயற்சி

## சிவமோகன் குற்றச்சாட்டு



வவுனியா. ஜன.10

திருட்டுத்தனமாக தமிழரசுக் கட்சியின் தற்காலிகப் பதவிகளை வைத்துக்கொண்டுள்ளவர்கள், கட்சிக்குச் சேறுபூசும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். வவுனியாவில் நேற்றுமுன்தினம் ஊடகங் களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரனுக் கும், ஸ்ரீநேசனுக்கு எதிராக தமிழரசுக் கட்சி என்ற போர்வையில் அவிழ்த்துவிடப்படும் சேறுபூசல்கள் தொடர்பாக நாம் கவனம் எடுத்துள்ளோம். தமிழரசுக்கட்சியின் தற்காலிக பதவிகளை வைத்துக்கொண்டிருப்பவர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளே இவை.

இவர்கள் தமிழரசுக்கட்சியில் நேர்மையான முறையில் நியமிக்கப்பட்டவர்கள் அல்லர். இவர்களின் உறுப்பினர் நீக்க அரசியல் முடிவுக்கு வரவேண்டும் என்பதே எனது கோரிக்கை.

நீங்கள் செய்யும் தவறுகள் மக்களுக்கு சுட்டிக்காட்டப்படும். நீங்கள் செய்யும் தவறுகள் தேசிய மக்கள் சக்தியை வெல்லவைக்கும். அதனால் ஜனநாயக ரீதியாக தமிழரசுக் கட்சியை மறுசீரமைப்பதற்கு மத்திய குழுவில் இருக்கும் அனைவரும் முன்வரவேண்டும். கட்சியை மக்கள் விரும்பும் அமைப்பாக நடத்த வேண்டும் - என்றார். (எ-110)


## காணி விற்பனைக்கு

**யாழ்.அச்சுவேலியில் காணி விற்பனைக்குண்டு**

- 34 பரப்புக் காணி இரண்டு பரப்பாக பிரித்த நிலையில் விற்பனைக்கு உண்டு.
- அச்சுவேலி நகரிலிருந்து 400m தூரம்
- அச்சுவேலி பொலிஸ் நிலையத்திலிருந்து 200m தூரம்
- அன்னை திரேசா கொன்மென்ற் பாடசாலையிலிருந்து 200m தூரம்
- சமுர்த்தி வங்கியிருந்து 200m தூரம்
- நன்னீர் ஊற்று, குடியிருப்பு சூழல், வீடுகள் கட்ட உகந்த காணி.
- இன்னும் சில துண்டுகள் மாத்திரம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:- 076 755 8606**
**077 605 5917**

(CS 31228) A

## வட இந்திய யாத்திரை

### காசி அயோத்தி சீரடிபாபா யாத்திரை

**ஆரம்பம் : 10.03.2026 நாட்கள் : 15 யாத்திரிகர்கள் : 15**

**தரிசிக்குமிடங்கள்**

டெல்லி, அட்சயதாம். நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற். வேறு இடங்களும் பார்க்கலாம். ஆக்ரா, தாஜ்மகால், செங்கோட்டை, மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி. பிரேம்மந்திரம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிரார்த்தம் செய்யும் இடம், புத்தகாய, புத்தாலயங்கள். காசி விஸ்வநாதர், விசாலாட்சி, காலபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 3 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம்,சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம். சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம், ஜோதிலிங்கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்தமாடல், இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்), நவபாஷாணம், திருப்புலானி. உத்தரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

**ஒரு நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்**

**பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்**

5விமானப் பயணங்கள். 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு. ரீ, கோப்பி, மினரல் வோட்டர். AC வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களைக் கேட்டுப் பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11.
T.P - 077 736 2154
E-mail - sriranganathan2601@gmail.com


# மரண அறிவித்தல்



## அழகையா நிரஞ்சினி

யாழ்ப்பாணம் யாழ். வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அழகையா நிரஞ்சனி அவர்கள் 06.01.2026 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன் (பாலு) - சரஸ்வதி (சரசு) தம்பதிகளின் அன்பு மகளும், அழகையா அவர்களின் அன்பு மனைவியும், மயூரன் (கனடா), கவிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்திரன் அவர்களின் அன்புச் சகோதரியும், ரஞ்சினி அவர்களின் அன்பு மைத்துனியும், பிரதிவிராஜ், சியாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரோஜி, நிஷாந்தி, நிரோஷன் ஆகியோரின் அன்பு மாமியும், பிரணவி, நிஹாரிகா, துருவன், ருத்ரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், அதுஷா, சஹானா ஆகியோரின் அன்புப் பூட்டியும்,

சண்முகநாதன், காலஞ்சென்றவர்களான ராஜதுரை, பத்மநாதன், நடராஜ், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தோற்றம் 25.04.1956 — மறைவு 06.01.2026

**தொடர்புகளுக்கு:**
மயூரன் (மகன்) - +15192817607
கவிதா (மகள்) - +16474512060

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.